பழங்குடியினர் நல இயக்குநரகம்

அனுப்புநர்
திரு. டி.ரிட்டோ சிரியாக், இ.வ.ப.,
இயக்குநர்,
பழங்குடியினர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5.

பெறுநர்
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சென்னை–5.

ந.க.எண்.பமே/எ1 / 2214 /2018 நாள். .08.2018

அய்யா,

பொருள்: பழங்குடியினர் நலம் – பணியாளர் தொகுதி – பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் "எ" பிரிவு கண்காணிப்பாளர் காலிப்பணியிடம் – ஆதிதிராவிடர் நல இயக்குநரகக் கண்காணிப்பாளருக்கு பணிமாறுதல் வழுங்கப்பட்டது – பணி ஏற்க அனுமதி வழங்க இயலாதது – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை(MS)எண்.56 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–1)துறை நாள்.28.08.2017
2. அரசுக் கடிதம் எண்3216/ஆதிந–1 2018–1, நாள்.20.02.2018
3. ஆதிதிராவிடர் நல இயக்குநர் செயல்முறைகள், ந.க.எண்.இ1/19287/17 நாள். 28.03.2018
4. ஆதிதிராவிடர் நல இயக்குநர் செயல்முறைகள், ந.க.எண்.இ1/6877/18 நாள். 13.08.2018 (2 கடிதங்கள்)
5. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.பமே/எ1/2214/2018, நாள்.16.08.2018.
6. பழங்குடியினர் நல இயக்குநரக பணியாளர்களின் மனு நாள். 16.08.18

************

பார்வையில் கண்டுள்ள அரசாணை மற்றும் கடிதங்களின் மீது தங்கள் கவனம் ஈர்க்க விழைகிறேன்.

மேற்படி அரசு ஆணை பத்தி –8 (ii) ல்

"பழங்குடியினர் நலப் பொருண்மைகள் தொடர்பான அனைத்து பணியிடங்களின் அதாவது அமைச்சுப் பணியிடங்கள், ஆசிரியர், காப்பாளர் பணியிடங்கள் மற்றும் அடிப்படை பணியாளர் பணியிடங்களில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர் உட்பட அனைத்து பணியிட நியமனம் மற்றும் மாறுதல், பணியிடங்கள் நிரப்புதல், பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயாரித்து வெளியிடுதல், பதவி உயர்வு அளித்தல், பணியாளர்களின் முதுநிலைப் பட்டியலை தனியே பராமரித்தல், ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான நேர்வுகள் போன்றவை பழங்குடியினர் நல இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும். மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர் சம்மந்தப்பட்ட பணியமைப்பு தொடர்பானவற்றை பழங்குடியினர் நல இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் அரசளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்." என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வையில் கண்ட அரசாணை மற்றும் அரசு கடிதத்தின் அடிப்படையில் 01.04.2018 முதல் பழங்குடியினர் நலத்துறை தனித்து செயல்பட்டு வருகிறது.

பார்வை – 3 ல் காணும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் உள்ள 7 கண்காணிப்பாளர் பணியிடங்களுக்கு பழங்குடியினர் நலத்துறையில் பணிபுரிய விருப்பம் அளித்த 7 நபர்களை பழங்குடியினர் நலத்துறைக்கு ஒகுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் ஒரு கண்காணிப்பாளர் பதவி உயர்வில் சென்றதால் காலியான பணியிடத்திற்கு, பார்வை – 4 ல் கண்டுள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி திருமதி. மா.லலிதா என்பவரை நியமித்து பணிமாறுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியர் பணியேற்க அனுமதி வழங்க இயலாத நிலை குறித்து பார்வை 5–ல் கண்ட இவ்வலுவலகக் கடிதத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை – 6 ல் கண்டுள்ள மனுவின்படி, பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் ஒருமித்த கருத்தாக தங்களுக்கு தனியாக பணிமூப்புப் பட்டியல் தயாரித்து பதவி உயர்வு வழங்க கோரியுள்ளனர். மென்மேலும் ஆதிதிராவிடர் நலத்துறை பணியாளர்களுக்கு பணியிடம் வழங்கப்படுவது அரசாணைக்கு முரணானது என்றும் தங்களது பதவி உயர்வு பாதிக்கப்படும் நடவடிக்கையாகக் கருதுவதால் திருமதி. மா.லலிதா, கண்காணிப்பாளர் என்பவரை பணியில் சேர அனுமதிக்க வேண்டாம் என நேரில் வலியுறுத்தியுள்ளனர்.

எனவே, பணியாளர்கள் விருப்பம் தெரிவித்தன் அடிப்படையிலும் ஏற்கனவே கண்காணிப்பாளர் பணியிடத்திற்கு பணியாளர்கள் துறை மாறுதலில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், தற்போது இத்துறை பணியாளர்கள் ஒரே மனதாக கோரிக்கை விடுத்துள்ளதையும் கருத்தில் கொண்டும், பார்வையில் கண்டுள்ள அரசாணையின்படியும் திருமதி.மா.லலிதா என்பவரை பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் பணியமர்த்துவது ஏற்புடையதாக இல்லையென்பதாலும் பார்வை 4–ல் கண்டுள்ள செயல்முறைகளின் படி இத்துறைக்கு பணிமாறுதல் வழங்கப்பட்டுள்ள கண்காணிப்பாளரை பணிஏற்க அனுமதிக்க இயலவில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு: பார்வை 3–ல் உள்ளவாறு

பழங்குடியினர் நல இயக்குநர்.

நகல்

1) கூடுதல் அரசு தலைமை செயலர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

2)திருமதி.மா.லலிதா, கண்காணிப்பாளர்.
ஆதிதிராவிடர்நலஇயக்குநரகம்,
சென்னை–5.
(தகவலுக்காக)